1971 டிசம்பர் 16]

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : டெல்லியில் கூடிய மாநாடு முழு அளவிலான முதல் அமைச்சர்கள் மாநாடு அல்ல. இந்தியாவிலுள்ள முதல் அமைச்சர்களில் ஐந்து முதல் அமைச்சர்களைக் கொண்ட குழுவை நியமித்து நிலச் சீர்திருத்தச் சட்டம் பற்றி விவாதிக்கக்கூடினார்கள். வேறு முதல் அமைச்சர்கள் யாரும் அழைக்கப்படவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : டெல்லியில் கூடிய மாநாட்டில் நகர சொத்துக்கு உச்சவரம்பு விதிப்பது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டதா? நகர சொத்து உச்சவரம்பு சம்பந்தமாக இந்த அரசின் கொள்கை என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மூலக் கேள்வி நில உச்சவரம்பு பற்றியது.

High Power Committee on Land Reforms

* 468. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) whether the High Power Committee set up to advise the Government on Land Reforms has concluded its deliberations; and

(*b*) if not, the approximate time that will be taken for the purpose?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) அந்தக் காரியத்திற்காக கால வரையறையொன்றும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆலோசனை கூறும் ஒரு குழுவாக நிலச் சீர்திருத்த உயர் அதிகாரக் குழு இயங்கி வருகிறது. அரசுக்குத் தொடர்ந்து அக்குழு நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக ஆலோசனைக் கூறும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நிலச்சீர்திருத்தத்திற்கான இந்த உயர்மட்டக் குழு இருக்கிறதே அது எப்போது கூடும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தச் சனிக்கிழமை கூடுவதாக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தக் கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் யார் யார் என்பதைத் தெரிவிப்பார்களா ? எக்ஸெம்ஷன்ஸ் சில இருக்கின்றன நம் லான்ட் ஸீலிங் ஆக்டில். அவற்றையெல்லாம் எடுப்பதற்கு நடவடிக்கைகள் அல்லது சிபார்சுகள் ஏதாவது இந்தக் கமிட்டி செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கனவே இந்தக் கமிட்டி செய்த சிபார்சின் பேரில் கரும்புத் தோட்டங்களுக்கு விலக்கு அளித்தோம். அதேபோல் கிரேஸிங் லான்ட்ஸ் ஐம்பது ஏக்கர் வரை வைத்திருந்தால் விலக்கு அளிக்கவேண்டும் என்று இருந்ததை, அந்த விலக்கை ரத்து செய்துவிட்டோம்.

இதில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக்கிறார்கள்:—

தலைவர் : உணவு-வருவாய்த் துறை அமைச்சர்.

உறுப்பினர்கள் : திருவாளர்கள் எஸ். அழகர்சாமி, திரு. துரை கோவிந்தராசன், திரு. கா. காளிமுத்து, திரு. எம். எ. லத்தீப், திரு. பி. எஸ். மணியன், திரு. எ. ஆர். மாரிமுத்து, திரு. வி. பழனிவேலு, திரு. ஆ. பாந்தாமன், திரு. எ. ஆர். பெருமாள், திரு. பி. பொன் சொக்கலிங்கம், திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. அ. ப. சண்முகசுந்தரம், திரு. கி. சி. ஆ. சிவப்பிரகாசம், திரு. பெ. சௌந்தரபாண்டியன், திரு. இ. எஸ். தியாகராசன், திரு. அ. வெள்ளைத்துரை, திரு. எம். ஆறுமுகசாமி, எம். எல். ஸி., திரு. எஸ். ஜெயராம செட்டியார், திரு. மன்னை பி. நாராயண சுவாமி, திரு. டி. கே. பொன்னுவேலு, திரு. கே. ராஜாராம், திரு. எம். சங்கரலிங்கம், திரு. சா. கணேசன், திரு. என். சுந்தரேச தேவர், எம். எல். ஸி.

THIRU K. T. K. THANGAMANI : We are grateful to the Hon Minister for the valuable information. My question is directed to the High Power Committee on Land Reforms. It is constituted under the leadership of the Hon. Chief Minister. I am also a member of the committee and I wanted to know when this particular committee is going to meet. At the same time we are grateful to the Hon. Minister for Food for giving the information about the Exemption Committee which is going to meet on 18th instant.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கனம் உறுப்பினர் அவர்கள் கூறுகிற கமிட்டி பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

சிறைகளில் உற்பத்தியாகும் பொருள்கள்

* 469 வினா—திரு. பெ. மலேச்சாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது தமிழகத்தில் உள்ள சிறைக் கைதிகளைக் கொண்டு அரசு என்னென்ன பொருட்களை உற்பத்தி செய்கின்றது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சபைமுன் விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Life term prisoners

* 470. *Q.*—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a considerable number of life term prisoners who have completed 15 years are still in jail; and

(*b*) if so, the steps taken for getting them released?

@ 212-216-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.